**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 02–ம்** தேதி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடலூர், நீலகிரி மாவட்டம், **அசல் வழக்கு எண்.36/2020** 1973ஆம் ஆண்டு ஆணையுறுதி ஆவணச் சட்டம் 10வது விதியின் படி திருமதி. A. மகேஸ்வரி, தலைமை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | **திரு.எல்ஜீ எல்தோ தாமஸ் (DW -1)** | கிராமம் : | கூடலூர் |
| தந்தை பெயர் : | திரு.K.T.எல்தோ தாமஸ் | தாலூக்கா : | கூடலூர் |
| ஜாதி : | – | மாவட்டம் : | நீலகிரி |
| தொழில் : | – | வயது : | 49/2026 |

---

**02.04.2026**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1).** நான் ஐலேண்ட் கட்டுமான நிறுவனத்தின் உரிமையாளர்களில் ஒருவர் என்று சொன்னால் சரிதான். நான் PhD பட்டம் பெற்றிருக்கிறேன். நான் தற்போது சட்டம் படித்து முடித்துவிட்டேன். சில பாடங்களில் தேர்ச்சி பெற வில்லை அதனால் நான் வழக்கறிஞராக பதிவு செய்யவில்லை. சட்ட நுணுக்கங்கள் குறித்து எனக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் ஓரளவுக்கு தெரியும். இவ்வழக்கின் வாதி எனக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரிதான். அவர் வழக்கறிஞராக கூடலூர் நீதிமன்றத்தில் பணியாற்றி வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

**2).** வாதியும் நானும் இவ்வழக்கிற்கு முன்பு நெருங்கிய நண்பர்கள் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கிற்கு முன்பு வாதிக்கும் எனக்கும் நிறைய கொடுக்கல் வாங்கல் இருந்திருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. நான் தான் வாதிக்கு பணம் கொடுத்திருக்கிறேன். வாதியிடம் இருந்து நான் பணம் எதுவும் பெறவில்லை. என்னிடம் காட்டப்படும் மின் அஞ்சல் பதிவிறக்க நகல் எனக்கு வாதி மின் அஞ்சலில்

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.04.02 17:08:44 +0530

அனுப்பியிருக்கிறார். மேற்படி மின் அஞ்சலில் நான் பணத்தை வாதிக்கு திருப்பி செலு்த்தியதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு தான் வாதி எழுதியிருக்கிறார் ஆனால் அது தவறாகும். **மின் அஞ்சல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வா.சா.ஆ.9 மின் அஞ்சலுக்கு நான் பதில் அனுப்பினேனா இல்லையா என்பது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

**3).** பி.வா.சா.ஆ.1 சான்றாவணம் எடிட் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 சான்றாவணம் என்னுடைய மொபைல் போனில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.

**(வாதியின் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.)**

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.04.02 17:08:47 +0530